நாட்டின் ஒவ்வொரு குடிமகனையும் அவமதிப்பதற்கு சமம்

ஜனாதிபதி உரை பற்றிய சோனியா கருத்துக்கு பிரதமர் மோடி கடும் கண்டனம்

புதுடெல்லி, பிப்.1

ஜனாதிபதியை அவமதிக்கும் வகையில் சோனியா காந்தி பேசியது, இந்த நாட்டின் ஒவ்வொரு குடிமகனையும் அவமதிப்பதற்கு சமம் என்று பிரதமர் மோடி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி திரவுபதி முர்மு நாடாளுமன்ற கூட்டுக்குழு கூட்டத்தில் நேற்று உரையாற்றினார். அதன் பின்னர் நாடாளுமன்ற வளாகத்தில் பத்திரிகையாளர்களை சந்தித்த காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தியிடம் ஜனாதிபதியின் உரை குறித்து நிருபர்கள் கருத்து கேட்டனர்.

அப்போது சோனியா காந்தி, "ஜனாதிபதி, உரையின் இறுதிப்பகுதியை வாசிக்கும்போது மிகவும் சோர்வடைந்து விட்டார். அவரால் பேச முடியவில்லை. பாவம்" என கூறினார். அப்போது காங்கிரஸ் எம்.பி.க்கள் ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி ஆகிய இருவரும் உடன் இருந்தனர்.

சோனியா காந்தியின் இந்த கருத்து பாரதீய ஜனதாவினரிடையே கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தி உள்ளது. மேலும் தனது செயலுக்காக சோனிய காந்தி மன்னிப்பு கேட்க வேண்டும் எனவும் பாரதீய ஜனதா வலியுறுத்தியுள்ளது.

குஜராத் மாநிலத்தின் துவாரகா நகரில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசிய பிரதமர் மோடி, ஜனாதிபதி குறித்த சோனியா காந்தியின் கருத்துக்கு கடும் கண்டனம் தெரிவித்தார்.

இதுப்பற்றிஅவர்கூறுகையில், "இந்த காங்கிரஸ்காரர்கள் தங்களை நாட்டின் எஜமானர்கள் என்று நினைக்கிறார்கள். காங்கிரஸ் அரச குடும்பத்தின் ஆணவம் மீண்டும் ஒருமுறை அம்பலப்படுத்தப்பட்டுள்ளது.

காங்கிரஸ் உறுப்பினர்கள் ஜனாதிபதி திரவுபதி முர்முவின் உரை குறித்த தங்களது கருத்துகளால் அவரை (ஜனாதிபதி) இழிவுபடுத்தியுள்ளனர். இது இந்த நாட்டின் 10 கோடி பழங்குடி சகோதர–சகோதரிகளுக்கு அவமானம்.

பழங்குடியியை சேர்ந்த எவரையும் காங்கிரஸ் அரச குடும்பம் ஏற்றுக்கொள்வதில்லை. ஒவ்வொரு அடியிலும் அவர்களை அவமதிக்கிறார்கள்" என கூறினார்.

இதுகுறித்து மத்திய அமைச்சரும், பாரதீய ஜனதா தேசிய தலைவருமான ஜே.பி.நட்டா எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் "ஜனாதிபதி திரவுபதி முர்மு குறித்து சோனியா காந்தி 'பாவம்' என்று கூறியிருப்பது குறிப்பிட்டத்தக்க அவமதிப்பையும், மிக உயர்ந்த அரசியலமைப்பின் பதவியின் கண்ணியத்தை எதிர்க்கட்சிகள் புறக்கணிப்பதையும் தெளிவாக காட்டுகிறது. மேலும் இது காங்கிரஸ் கட்சியின் மேட்டுக்குடி, ஏழைகளுக்கு எதிரான, பழங்குடியினருக்கு எதிரான மனநிலையையும் காட்டுகிறது" என குறிப்பிட்டுள்ளார்.

அதேசமயம் பாரதீய ஜனதாவின் குற்றச்சாட்டுகளை மறுத்துள்ள காங்கிரஸ், சோனியா காந்தி ஜனாதிபதி மீது மிகுந்த மரியாதை வைத்திருப்பதாகவும், அவரது கருத்து ஊடகங்களால் திரித்து வெளியிடப்பட்டதாகவும் கூறியுள்ளது.

ஊடகங்கள் திரித்து வெளியீடு

இதுகுறித்து காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர் பிரியங்கா காந்தி பத்திரிகையாளர்களிடம் கூறுகையில், "என் அம்மா 'ஜனாதிபதி இவ்வளவு நீண்ட உரையைப் படித்து சோர்வடைந்திருப்பார், பாவம்' என்று மட்டும் சொன்னார். அவர் ஜனாதிபதியை முழுமையாக மதிக்கிறார். உண்மையில் அவர் மீது மிகுந்த மரியாதை வைத்திருக்கிறார். இதுபோன்ற ஒரு விஷயத்தை ஊடகங்கள் திரித்து வெளியிடுவது மிகவும் துரதிருஷ்டவசமானது" என கூறினார்.

ஜனாதிபதி மாளிகை விளக்கம்

சோனியா காந்தி தெரிவித்த கருத்துக்கு ஜனாதிபதி மாளிகை விளக்கம் அளித்துள்ளது.

இது குறித்து ஜனாதிபதி மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி நிகழ்த்திய உரை குறித்து ஊடகங்களிடம் பேசிய காங்கிரஸ் கட்சியின் சில முக்கியமான தலைவர்கள், உயர் பதவியின் கண்ணியத்தைக் காயப்படுத்தும் வகையில் கருத்து தெரிவித்துள்ளனர். இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. அந்தத் தலைவர்கள், "உரையின் இறுதியில் ஜனாதிபதி மிகவும் சோர்வடைந்து விட்டார். அவரால் பேச முடியவில்லை" என்று தெரிவித்துள்ளனர். இதில் உண்மையைத் தெளிவுபடுத்த ஜனாதிபதி மாளிகை விரும்புகிறது.

ஜனாதிபதி எந்த நிலையிலும், எந்தத் தருணத்திலும் சோர்வடைய வில்லை. விளிம்புநிலை மக்களுக்காக, பெண்களுக்காக, விவசாயிகளுக்காக பேசும்போது சோர்வு ஏற்படாது என்பதை ஜனாதிபதி உறுதியாக நம்புகிறார். இந்தி போன்ற இந்திய மொழிகளில் உள்ள சொல் வழக்குகளை இந்தத் தலைவர்கள் அறிந்திருக்கவில்லை என்பதால் தவறான எண்ணத்தை உருவாக்கியிருக்கலாம் என்று ஜனாதிபதி மாளிகை நம்புகிறது. எனினும், எந்த நிலையிலும் இதுபோன்ற கருத்துகள் மிகவும் மோசமானவை. துரதிருஷ்டவசமானது, முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டியது.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்தார் ஆதவ் அர்ஜுனா

தேர்தல் பிரச்சார மேலாண்மை பொதுச் செயலாளராக நியமனம்

சென்னை. பிப்.1

நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக்கழக கட்சியில் ஆதவ் அர்ஜுனா இணைந்தார். அவர் கட்சியின் தேர்தல் பிரச்சார மேலாண்மை பொதுச்செயலாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு விடுதலை சிறுத்தைகள் கட்சியில் இருந்து தற்காலிகமாக ஆதவ் அர்ஜுனா நீக்கப்பட்டார்.

இதற்கிடையே, ஆதவ் அர்ஜுனா பனையூரில் உள்ள தமிழக வெற்றிக்கழக கட்சி அலுவலகத்திற்கு நேற்று வந்தார். அவரை பொதுச்செயலாளர் புஸ்சி ஆனந்த் வரவேற்று அழைத்து சென்றார். அங்கு விஜய்யை சந்தித்து ஆதவ் அர்ஜுனா த.வெ.க.வில் இணைந்து கொண்டார். கட்சியில் இணைந்த சில மணி நேரத்திலே அவருக்கு தமிழக வெற்றிக்கழகத்தின் தேர்தல் பிரச்சார மேலாண்மை பொதுச்செயலாளர் பதவியை விஜய் வழங்கினார்.

தமிழக வெற்றிக்கழகத்தின் தேர்தல் பிரிவு பொதுச்செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள ஆதவ் அர்ஜுனா 2026ம் ஆண்டு நடைபெற இருக்கும் சட்டசபை பொது தேர்தலில்



தமிழக வெற்றிக்கழக வெற்றிக்கான வியூகத்தை அமைக்க உள்ளார். அவர் ஏற்கனவே தனியாக தேர்தல் கள ஆய்வு அமைப்பை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது

அதேபோல், அண்ணாதி.மு.க. தகவல் தொழில் நுட்ப பிரிவு இணை செயலாளராக இருந்த சி.டி.ஆர். நிர்மல் குமார், பேச்சாளர் ராஜ்குமார் ஆகியோர் தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்தனர். அவர்களை யும் விஜய் வரவேற்றார்.

இதில் நிர்மல் குமாருக்கு தமிழக வெற்றிக்கழகத்தின் தகவல் தொழில்நுட்பம் மற்றும் சமூக ஊடக பிரிவு துணைப் பொதுச் செயலாளர் பதவியும், ராஜ்குமாருக்கு கொள்கை பரப்பு செயலாளர் பதவியும் வழங்கப்பட்டுள்ளது. இதுதவிர, தலைமை கழக இணைப் பொருளாளராக பி.ஜெகதீஷ், கொள்கை பரப்பு இணைச் செயலாளர்களாக லயோலா மணி, ஏ.சம்பத்குமார் உள்ளிட்ட பலர் நியமிக்கப்பட்டுள்ளனர். அதனை தொடர்ந்து, தமிழக வெற்றிக்கழகத்தின் 3ம் கட்ட மாவட்ட செயலாளர்கள் பட்டியலை விஜய் வெளியிட்டார்.

அதன் விவரம் வருமாறு:

மத்திய சென்னை–எஸ்.கே.எம். குமார், கிருஷ்ணகிரி கிழக்கு–முரளி, கிருஷ்ணகிரி மத்தியம்–ஜி.சுரேஷ், கிருஷ்ணகிரி மேற்கு–வடிவேல், தேனி தெற்கு–வி.பாண்டி, தேனி வடக்கு–எஸ்.பிரகாஷ், நெல்லை தெற்கு–எஸ். ராஜகோபால், நெல்லை வடக்கு–அந்தோணி சேவியர்.

தஞ்சாவூர் வடக்கு–நிஜாம் அலி, தஞ்சாவூர் மேற்கு–ரமேஷ், வேலூர் கிழக்கு–ஏ.நவீன், வேலூர் மேற்கு–ஆர்.வேல்முருகன், சேலம் மேற்கு–கே.செல்வம், சேலம் தெற்கு–ஆர். எஸ்.மணிகண்டன், சேலம் கிழக்கு–என்.வெங்கடேசன், சேலம் வடக்கு, மேற்கு–கே.செந்தில்குமார். திருப்பூர் தெற்கு–ஆர்.திருமலை, திருப்பூர் மேற்கு–ஜி.கே. சங்கர், ராமநாதபுரம் கிழக்கு–மலர்விழி ஜெயபாலா ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். பின்னர் நியமிக்கப்பட்ட மாவட்ட செயலாளர்களுடன் விஜய் தனித்தனியாக ஆலோசனை மேற்கொண்டார்.

'டி.என்.ஸ்கில்' செயலியை 50 ஆயிரம் பேர் பதிவிறக்கம்

சென்னை, பிப்.1–

தமிழக அரசின் திறன் மேம்பாட்டு கழகம், நான் முதல்வன் திட்டத்தில் இலவச திறன் பயிற்சி கொடுத்து பணி உத்தரவாதம் வழங்குகிறது.

இதற்காக தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் 'டி.என்.ஸ்கில்' (TNSkill) (தமிழ்நாடு திறன்) என்ற ஒரு புதிய அப்ளிகேசனை (செயலி) அறிமுகப்படுத்தி உள்ளது.

இதனை செல்போனில் 'பிளேஸ்டோரில்' சென்று பதிவிறக்கம் செய்யலாம். இதை பதிவிறக்கம் செய்த பின்னர் பயனர் தங்களது சுய விவரங்களை கொடுத்து உள்ளே நுழைய வேண்டும். தொடர்ந்து தமிழகத்தில் உள்ள 38 மாவட்டங்களை சேர்ந்தவர்கள் தங்களுக்கு பிடித்த வேலைக்கு விண்ணப்பிக்கலாம். அதில் பல்வேறு வகையான துறைகளை தேர்ந்தெடுக்கும் வசதி கொடுக்கப்பட்டு உள்ளது. எந்த மாவட்டத்தில் திறன் பயிற்சி தேவை? என்பதையும் பயனர்கள் தேர்ந்தெடுக்கலாம்.

'டி.என்.ஸ்கில்' செயலி அறிமுகம் செய்யப்பட்டதில் இருந்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பதிவிறக்கம் செய்துள்ளதாக திறன் மேம்பாட்டு கழகம் தெரிவித்துள்ளது.

தாம்பரம்–செங்கல்பட்டு 4வது ரெயில் பாதை; ரூ.1,165 கோடிக்கு தெற்கு ரெயில்வே திட்ட அறிக்கை

சென்னை, பிப்.1–

தாம்பரம் – செங்கல்பட்டு இடையே, 4வது புது ரெயில் பாதை 1,165 கோடி ரூபாயில் செயல்படுத்த, விரிவான திட்ட அறிக்கையை, ரெயில்வே வாரியத்துக்கு தெற்கு ரெயில்வே அனுப்பியுள்ளது.

சென்னை – செங்கல்பட்டு ரெயில் பாதை, தென் மாவட்டங்களுக்கு செல்ல பிரதான பாதையாக இருக்கிறது. இவற்றில், 50க்கும் மேற்பட்ட விரைவு ரெயில்கள், 250க்கும் மேற்பட்ட மின்சார ரெயில்கள் இயக்கப்படுகின்றன.

இதில், சென்னை – கடற்கரை – செங்கல்பட்டு தடத்தில் ஒரு நாளைக்கு 3.5 லட்சம் பயணியர் சென்று வருகின்றனர். பயணியர் தேவைக்கு, புறநகர் மின்சார ரெயில் இயக்கம் இல்லை. கூடுதல் ரெயில் சேவை துவங்க வேண்டும் என, பயணியர் வலியுறுத்தி வருகின்றனர்.

தற்போது, 3 பாதைகள் உள்ளன. போதிய ரெயில் பாதை இல்லாததால், ரெயில் சேவை அதிகரிப்பதில் சிக்கல் இருந்து வருகிறது.

எனவே, தாம்பரம் – செங்கல்பட்டு இடையே 4வது புது பாதையை, ரெயில்வேயுடன் இணைந்து அமைக்க தமிழக அரசு விருப்பம் தெரிவித்தது. அதன்படி, இந்த திட்டத்திற்கான, விரிவான திட்ட அறிக்கையும் தயாரிக்கப்பட்டது.

இது குறித்து, தெற்கு ரெயில்வே அதிகாரிகள் கூறியதாவது:–

பொதுமக்களின் தேவையை கருத்தில் கொண்டு, பல்வேறு மாநில அரசுகள், ரெயில்வேயுடன் இணைந்து, திட்டப்பணிகளை நிறைவேற்றுகின்றன. அந்த வகையில் தமிழக அரசின், சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து ஆணையம், புறநகர் பயணியருக்கான சேவையை வழங்க, இந்த திட்டப்பணி மேற்கொள்ள உள்ளது.

அதன்படி, 1,165 கோடி ரூபாயில் இந்த திட்டம் செயல்படுத்த, டி.பி.ஆர். எனும் விரிவான திட்ட அறிக்கையை தயாரித்து, ரெயில்வே வாரியத்தின் ஒப்புதலுக்கு அனுப்பி உள்ளோம். இதற்கான அறிவிப்பை, ரெயில்வே வாரியம் வெளியிடும்.

அதன்பின், போதிய நிலங்களை கையகப்படுத்தி, ரெயில் பாதை பணிகளை மேற்கொள்வோம். இந்த புதிய பாதை பயன்பாட்டிற்கு வரும்போது, கூடுதல் ரெயில்களை இயக்க முடியும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

NAME CHANGE

I, OLD NAME : Aashish Bokadia,
Old Surname - Imrath Bokadia
S/O : Imrath Bokadia
DATE OF BIRTH : 19.09.1988
ADDRESS : FLAT D-1402 PRINCE COURTYARD APARTMENT NO. 1100-102.POONAMALLEE HIGH ROAD,EGMORE,CHENNAI – 600008.
SHALL HENCEFORTH BE KNOWN AS
AASHISH BOKADIA
OLD NAME : Aashish Bokadia
Old Surname - Imrath Bokadia

NAME CHANGE

I, OLD NAME : Sneha
Old Surname - Aashish Bokadia,
W/O : Aashish Bokadia,
DATE OF BIRTH : 27.05.1988
ADDRESS : FLAT D-1402 PRINCE COURTYARD APARTMENT NO. 1100-102.POONAMALLEE HIGH ROAD,EGMORE,CHENNAI – 600008.
SHALL HENCEFORTH BE KNOWN AS
SNEHA BOKADIA
OLD NAME : Sneha
Old Surname - Aashish Bokadia

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, AT SHOLINGANALLUR
O.S.No.789 of 2024

Mrs. M. Poonkodi ...Plaintiff
-Vs-
Mr. Elumalai and others ...Defendants

To
D5 :- Mr. E. Devendran,
No. 1/39, S. Kolathur Main Road, Viduthalai Nagar, Chennai – 600117
D6:- Mrs. S. S. Darly,
No. 120 – A , Viduthalai Nagar, S. Kolathur, Chennai – 600117

Sir/Madam,
Please take notice that the above case has been filed against you for recovery of vacant Possession of the suit Property and for permanent injunction and the same has been posted for your appearance on **18.02.2025** before the Hon'ble District Munsif Cum Judicial Magistrate, at Sholinganallur at 10.30.a.m. Hence appear in person or through duly instructed counsel, failing which the same will be heard and decided in your absence.

MR. N.KARUNANIDHI & MRS. S.ALLI
ADVOCATES FOR PLAINTIFF

எம்ஆர்எப் லிமிடெட்
CIN: L25111TN1960PLC004306
பதிவு அலுவலகம்: 114, கிரீம்ஸ் ரோடு, சென்னை–600 006.
Email : mrfshare@mrfmail.com ;
Tel.:044-28292777; Fax : 91-44-28295087
CIN: L25111TN1960PLC004306;
Website : www.mrftyres.com

கீழ்க்கண்ட பங்குச் சான்றிதழ்கள் தவறி விட்டன அல்லது தொலைந்துவிட்டன அல்லது திருடப்பட்டன எனவும், அதன் பங்குதாரர்/உரிமை கோருபவர் பங்குச் சான்றிதழ்கள் நகல் கோரி நிறுவனத்திடம் முறையிட்டுள்ளார் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
52 பங்குகளுக்கான பங்கு சான்றிதழ் எண். 112354, 52045, 71272, 153986, 102142, குறியீடு எண்கள். 1228028-1228032, 1739598-1739612, 2290982-2290994, 2943955-2943959, 3372906-3372919, லெட்ஜர் போலியோ எண்.P02386 –ன் கீழ் உள்ள பங்குகளுக்கு சுபாஷ் சாலை, அமராவதி 444 601ல் வசிக்கும் ஹேமந்த் லக்ஷ்மன் பங்கர்கர் அவர்கள் உரிமை கோருகிறார்.
30 பங்குகளுக்கான பங்கு சான்றிதழ் எண். 26066, குறியீடு எண்கள். 989601-989630, லெட்ஜர் போலியோ எண்.S00309 –ன் கீழ் உள்ள பங்குகள் திரு. ஹரி சந்த் சர்தானா (இறந்து விட்டார்) அவர்கள் பெயரில் உள்ளது. அதற்கு 11, சிங்கிள் ரூம், லஜ்பத் நகர், வடக்கு டெல்லி 110 024 என்ற முகவரியில் வசிக்கும் திரு. ஜானித் சர்தானா அவர்கள் உரிமை கோருகிறார்.
166 பங்குகளுக்கான பங்கு சான்றிதழ் எண். 15825/26, 53376, 73002, 112662, 154462, குறியீடு எண்கள். 725021-725080, 1768474-1768503, 1870606-1870609, 2333328-2333355, 1233225-1233247, 2949504-2949524, லெட்ஜர் போலியோ எண்.R00180–ன் கீழ் உள்ள பங்குகள் திரு. ராஜேந்திரநாத் ரக்ஷித் (இறந்து விட்டார்) அவர்கள் பெயரில் உள்ளது. அதற்கு நுயபரா, கோலேபஜார், சதர் சம்பல்பூர், ஒடிசா 768 001 என்ற முகவரியில் வசிக்கும் திரு. சந்தோஷ் குமார் ரக்ஷித் மற்றும் திரு. ராகுல் ரஞ்சித் குமார் ரக்ஷித் ஆகியோர் உரிமை கோருகிறார்கள்.
15 பங்குகளுக்கான பங்கு சான்றிதழ் எண். 147624, 116186, குறியீடு எண்கள். 2180919-2180923, 1844316-1844325, லெட்ஜர் போலியோ எண்.C02462–ன் கீழ் உள்ள பங்குகள் திரு. திலீப் மதன்லால் சோக்ஸி (இறந்து விட்டார்) மற்றும் திரு. ஜதின் டி சோக்ஸி மற்றும் திருமதி ரீனா ஜே சோக்ஸி (இருவரும் உயிருடன் உள்ளனர்) ஆகியோர் பெயரில் கூட்டாக உள்ளது. அதற்கு செரீன் அபார்ட்மெண்ட்ஸ், 92/2, 9வது பிரதான சாலை, சென்னை 600 040 என்ற முகவரியில் வசிக்கும் அவர்கள் உரிமை கோருகிறார்கள்.
18 பங்குகளுக்கான பங்கு சான்றிதழ் எண். 146942, குறியீடு எண்கள். 2167206-2167223, லெட்ஜர் போலியோ எண்.C02537–ன் கீழ் உள்ள பங்குகளுக்கு செரீன் அபார்ட்மெண்ட்ஸ், 92/2, 9வது பிரதான சாலை, சென்னை 600 040 என்ற முகவரியில் வசிக்கும் திரு. ஜதின் டி சோக்ஸி மற்றும் திருமதி ரீனா ஜே சோக்ஸி ஆகியோர் உரிமை கோருகிறார்கள்.
21 பங்குகளுக்கான பங்கு சான்றிதழ் எண். 116184/85, குறியீடு எண்கள். 2808631-2808645, 1036097-1036102, லெட்ஜர் போலியோ எண். C03054–ன் கீழ் உள்ள பங்குகள் திரு. திலீப் எம் சோக்ஸி (இறந்து விட்டார்) மற்றும் திரு. ஜதின் டி சோக்ஸி (உயிருடன் உள்ளார்) ஆகியோர் பெயரில் கூட்டாக உள்ளது. அதற்கு செரீன் அபார்ட்மெண்ட்ஸ், 92/2, 9வது பிரதான சாலை, சென்னை 600 040 என்ற முகவரியில் வசிக்கும் அவர் உரிமை கோருகிறார்.
மேற்கண்ட பங்குச் சான்றிதழ்களை எந்த வகையிலும் வாங்க வேண்டாம் அல்லது கையாள வேண்டாம் என பொதுமக்கள் இதன்மூலம் எச்சரிக்கப்படுகிறார்கள். எவருக்கேனும் கோரிக்கை இருப்பின் அது குறித்து இந்த அறிவிப்பை வெளியிட்ட நாளிலிருந்து 21 நாட்களுக்குள் மேலே குறிப்பிட்டுள்ள முகவரியில் உள்ள நிறுவனத்திற்கு எழுத்துப்பூர்வமாக தாக்கல் செய்ய வேண்டும், அதன் பிறகு எந்த உரிமை கோரலும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. நகல் பங்கு சான்றிதழ் வழங்கும் நடவடிக்கையை நிறுவனம் மேற்கொள்ளும்.

எம்ஆர்எப் லிமிடெட்டுக்காக
சென்னை **S. தன்வந்த் குமார்**
ஜனவரி 31, 2025 **கம்பெனி செயலாளர்**

MOTILAL OSWAL HOME LOANS
மோதிலால் ஓஸ்வால் ஹோம் பைனான்ஸ் லிமிடெட்
கார்ப்பரேட் அலுவலகம்: மோதிலால் ஓஸ்வால் டவர், ரஹிமுதுல்லா சயானி ரோடு, பரேல் எஸ்டி டெப்போ எதிரில், பிரபாதேவி, மும்பை–400025 Email : hfquery@motilaloaswal.com
CIN Number :- U65923MH2013PLC248741

இ - ஏலம் மற்றும் விற்பனைக்கான பொது அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 2002ன் விதி 8 மற்றும் 9ன் கீழ் அசையா சொத்துகள் விற்பனைக்கான 30 நாட்கள் இ-ஏல விற்பனை அறிவிப்பு
இதன் மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும் கடன்தாரர்கள்/உத்தரவாததாரர்கள்/அடமானதாரர்களுக்கு குறிப்பாகவும் அறிவிக்கப்படுவது யாதெனில், மோதிலால் ஓஸ்வால் ஹோம் பைனான்ஸ் லிமிடெட்டில் (முன்பு ஆஸ்பயர் ஹோம் ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்) அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்து நிலுவைத் தொகை மற்றும் கூடுதல் வட்டி, கட்டணங்கள் மற்றும் செலவுகள் போன்றவற்றை மீட்டெடுப்பதற்காக 'ஆன்லைன் இ–ஏலம்' மூலம் **"எங்கு எப்படி எவ்வாறு உள்ளதோ அப்படியே" என்ற அடிப்படையில் "எந்தவித மாற்றமும் இல்லாமல்"** motilaloswalhf.com என்ற இணையதளத்தின் மூலம் SARFAESI சட்டத்தின் விதிகள் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 2002ன் விதி 8 மற்றும் 9ன் கீழ் விற்பனை செய்யப்பட உள்ளது/முறையே விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

இ ஏலத் தேதி மற்றும் நேரம் : 11.03.2025 அன்று காலை 11.00 முதல் மதியம் 2.00 மணி வரை (ஒவ்வொன்றும் 5 நிமிடம் வரம்பற்ற நீட்டிப்புகளுடன்)

கடன்தாரர்கள்/உத்தரவாதாரர்கள் பெயர்/ கடன் கணக்கு எண்.	டிமாண்ட் நோட்டீஸ் தேதி மற்றும் தொகை	அசையா சொத்து குறித்த விவரம்	ரிசர்வ் விலை, டேவணித் தொகை & டேவணித் தொகையை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி
LXVEL00117-180061106 கிளை: வேலூர் கடன்தாரர்: ராம்குமார் D D உடன் கடன்தாரர் : மாலா D D உத்தரவாததாரர் : குமரேசன் எழில்குமார் ஆறுமுகம்	29-08-2024/ ரூ.11,14,929/- (ரூபாய் பதினொரு லட்சத்து பதினான்காயிரத்து தொள்ளாயிரத்து இருபத்தொன்பது மட்டும்)	எஸ்.எப். எண். (பழையது)191/1 (புதியது) 59/2a, 519/31, விஸ்தீரணம்: 74 சதுர மீட்டர், அம்பேத்கர் நகர், வெட்டுவானம் கிராமம், பள்ளிகொண்டா டவுன் பஞ்சாயத்து, அணைக்கட்டு,வேலூர் 635809, காட்பாடி, வேலூர், தமிழ்நாடு.	ரிசர்வ் விலை:ரூ.12,00,000/- (ரூபாய் பன்னிரெண்டு லட்சம் மட்டும்) EMD: ரூ.1,20,000/- (ரூபாய் ஒரு லட்சத்து இருபதாயிரம் மட்டும்) EMD டெபாசிட்டிற்கான கடைசி தேதி : 10-03-2025

இ – ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்: 1. ஏல ஆவணத்தின் மேலும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறையின்படி ஏலம் நடைபெறும். ஏலத் தகவல் மற்றும் உதவி, ஏல ஆவணங்கள், இ-ஏலத்திற்காக வைக்கப்பட்டுள்ள ஈடுபெற்ற சொத்தின் விவரங்கள் மற்றும் ஆன்லைனில் சமர்ப்பிக்கப்பட உள்ள ஏலப் படிவம் ஆகியவை குறித்து ஏலதாரர்கள் எங்களின் இ–ஏல சேவை வழங்குனர், M/s. **அர்கா இமார்ட் பிரைவேட் லிமிடெட்டின்** https://www.auctionbazaar.com/ என்ற இணையதளத்தை பார்வையிடலாம். ஆர்வமுள்ள வாங்குவோர் அதே இணையதளத்தில் ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் செயல்முறைகள் குறித்து பார்த்து அறிந்து கொள்ளலாம் மற்றும் **ராஜசேகரன் கே – 7045501738, ஜே ராஜா – 8655462601** ஆகியோரை தொடர்பு கொள்ளலாம்.மேலே குறிப்பிட்டுள்ள இணையதளத்தில் விவரங்கள் கிடைக்கும் மற்றும் அவர்களின் மையப்படுத்தப்பட்ட உதவி மையம் + 91 83709 69696, மின்னஞ்சல் முகவரி: contact@auctionbazaar.comஐ தொடர்பு கொள்ளலாம்.

இடம் : தமிழ்நாடு
தேதி : 01.02.2025
*மொழிபெயர்ப்பில் முரண்பட்டால், ஆங்கிலப் பதிப்பே மேலோங்கும்.

ஒப்பம்/–
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
மோதிலால் ஓஸ்வால் ஹோம் பைனான்ஸ் லிமிடெட்
(முன்பு ஆஸ்பயர் ஹோம் ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்)

MOTILAL OSWAL HOME LOANS
மோதிலால் ஓஸ்வால் ஹோம் பைனான்ஸ் லிமிடெட்
கார்ப்பரேட் அலுவலகம்: மோதிலால் ஓஸ்வால் டவர், ரஹிமுதுல்லா சயானி ரோடு, பரேல் எஸ்டி டெப்போ எதிரில், பிரபாதேவி, மும்பை–400025 Email : hfquery@motilaloaswal.com
CIN Number :- U65923MH2013PLC248741

இ - ஏலம் மற்றும் விற்பனைக்கான பொது அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 2002ன் விதி 8 மற்றும் 9ன் கீழ் அசையா சொத்துகள் விற்பனைக்கான 15 நாட்கள் இ-ஏல விற்பனை அறிவிப்பு
இதன் மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும் கடன்தாரர்கள்/உத்தரவாததாரர்கள்/அடமானதாரர்களுக்கு குறிப்பாகவும் அறிவிக்கப்படுவது யாதெனில், மோதிலால் ஓஸ்வால் ஹோம் பைனான்ஸ் லிமிடெட்டில் (முன்பு ஆஸ்பயர் ஹோம் ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்) அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்து நிலுவைத் தொகை மற்றும் கூடுதல் வட்டி, கட்டணங்கள் மற்றும் செலவுகள் போன்றவற்றை மீட்டெடுப்பதற்காக "ஆன்லைன் இ–ஏலம்" மூலம் **"எங்கு எப்படி எவ்வாறு உள்ளதோ அப்படியே" என்ற அடிப்படையில் "எந்தவித மாற்றமும் இல்லாமல்"** motilaloswalhf.com என்ற இணையதளத்தின் மூலம் SARFAESI சட்டத்தின் விதிகள் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 2002ன் விதி 8 மற்றும் 9ன் கீழ் விற்பனை செய்யப்பட உள்ளது/முறையே விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

இ ஏலத் தேதி மற்றும் நேரம் : 24.02.2025 அன்று காலை 11.00 முதல் மதியம் 2.00 மணி வரை (ஒவ்வொன்றும் 5 நிமிடம் வரம்பற்ற நீட்டிப்புகளுடன்)

கடன்தாரர்கள்/உத்தரவாதாரர்கள் பெயர்/ கடன் கணக்கு எண்.	டிமாண்ட் நோட்டீஸ் தேதி மற்றும் தொகை	அசையா சொத்து குறித்த விவரம்	ரிசர்வ் விலை, டேவணித் தொகை & டேவணித் தொகையை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி
LAN: LXVEL00417-180061532 கிளை: வேலூர் கடன்தாரர்: ரவிச்சந்திரன் டி உடன் கடன்தாரர்: சங்கீதா ஆர்	18-06-2024/ ரூ.1021372/- (ரூபாய் பத்து லட்சத்து இருபத்தோராயிரத்து முன்னூற்று எழுபத்தி ரெண்டு மட்டும்)	எஸ் எண்.682/46 பஞ்சூர் கிராமம், நாட்றாம்பள்ளி தாலுக்கா, வேலூர் மாவட்டம் 635854 திருப்பத்தூர் வேலூர் தமிழ்நாடு	ரிசர்வ் விலை:ரூ.8,50,000/- (ரூபாய் எட்டு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) EMD: ரூ.85,000/- (ரூபாய் எண்பத்தைந்தாயிரம் மட்டும்) EMD டெபாசிட்டிற்கான கடைசி தேதி : 23-02-2025
LAN: LXVEL00417- 180066105 கிளை: வேலூர் கடன்தாரர்: தணிகாசலம் துரைராஜ் உடன் கடன்தாரர்: பாவண்ணா தணிகாசலம்	05-01-2024/ ரூ.768118/- (ரூபாய் ஏழு லட்சத்து அறுபத் தெட்டாயிரத்து நூற்று பதினெட்டு மட்டும்)	எஸ்.எப்.எண். 157/2, (என்) 157/10, திருமணி கிராமம், காட்பாடி தாலுக்கா, வேலூர், தமிழ்நாடு 632202	ரிசர்வ் விலை:ரூ.6,65,000/- (ரூபாய் ஆறு லட்சத்து அறுபத்தைந்தாயிரம் மட்டும்) EMD: ரூ.66,500/- (ரூபாய் அறுபத்தாறாயிரத்து ஐநூறு மட்டும்) EMD டெபாசிட்டிற்கான கடைசி தேதி : 23-02-2025
LAN: LXMOTHIRLR721- 220595153 கிளை: திருவள்ளூர் கடன